# மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி: 6,000 பெண்கள் பங்கேற்பு

சென்னை, ஏப்.14: சென்னையில் நடைபெற்ற மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு பேரணியில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றனர்.

பெண்களின் உடல் ஆரோக்கியம் மற்றும் மார்பகப் புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த மியாட் மருத்துவமனையும் பிங்க்கத்தான் அமைப்பும் இணைந்து பேரணிக்கு ஞாயிற்றுக்கிழமை (ஏப்.13) ஏற்பாடு செய்திருந்தன.

சென்னை தீவுத் திடலில் இருந்து 3 கிலோமீட்டர் தொலைவு, 5 கிலோமீட்டர் தொலைவு, 10 கிலோமீட்டர் தொலைவு என 3 விதமான ஓட்டங்களில் பெண்கள் காலை 6 மணிக்கு பங்கேற்றனர்.

முன்னதாக, இந்த நிகழ்ச்சியை மியாட் மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸ், தலைவர் மல்லிகா மோகன்தாஸ், இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ், நடிகரும் பிங்கத்தான் அமைப்பின் நிறுவனருமான மிலிந்த் சோமன் உள்ளிட்டோர் கொடி அசைத்துத் தொடங்கி வைத்தனர்.




சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு பேரணியில் பங்கேற்ற பெண்கள். (உள்படம்-இடமிருந்து) டாக்டர் பிருத்வி மோகன்தாஸ், மல்லிகா மோகன்தாஸ், நடிகர் மிலிந்த் சோமன், டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ்.